# <u>In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.</u>

O.S.No.53/2023 தேதி- 08.07.2025
(P.W.1) - மகேஷ்குமார்

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால் பம்பச்சைகரைக்காடு ஆகும். வாதியின் வீட்டில் இருந்து எவ்வளவு தூரத்தில் நான் வசித்து வருகிறேன் என்றால் வாதியின் எதிர் வீட்டில் வசித்து வருகிறேன். என் அப்பாவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 4 பிள்ளைகள் ஆகும். என் அப்பாவிற்கு எவ்வளவு சொத்து உண்டு என்றால் வீடு உள்ள 10 1/2 சென்ட் மற்றும் 40 சென்ட் வயல் உள்ளது. என்னுடைய தொழில் என்ன என்றால் ரப்பர் மரத்தில் இருந்து பால் வெட்டும் தொழில் செய்து வருகிறேன். தற்போது நான் யார் ரப்பர் மரங்கள் இருக்கும் இடத்தில் பால் வெட்டும் வேலை செய்து வருகேிறென் என்றால் குமார் என்பரிடம் செய்துவருகிறேன். மேற்சொன்ன குமார் என்பவருக்கு எத்தனை மரங்கள் உள்ளது என்றால் 450 மரங்கள் உள்ளது.

2. எத்தனை சீட் கிடைக்கும் என்றால் 12 சீட் கிடைக்கும். கன்னியாகுமாரி மாவட்டத்தில் பெரும்பான்மை இடத்தில் ரப்பர் மரங்கள் உள்ளது என்றால் சரிதான். அதில் சிறு குறு விவசாயிகளுக்கு நிறைய பரப்பளவு உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. என் வீட்டின் பக்கத்தில் பெரிய எஸ்டேட் உள்ளதா என்றால் உள்ளது 3 முதல் 4 ஏக்கர் கொண்ட எஸ்டேட் உள்ளது. மேற்சொன்னவாறு எத்தனை எஸ்டேட் உள்ளது என்றால் குறிப்பிட்டு தெரியாது. பெருவழிகடவு என்ற இடத்தில் உள்ள எஸ்டேட் என் வீட்டில் இருந்து எவ்வளவு <u>தூரம்</u> இருக்கும் என்றால் 4 முதல் 5 கிலோ மீட்டர் இருக்கும். எனக்கு சம்பளம் எவ்வளவு என்றால் ரூ.750/- ஆகும். ஒரு கிலோ ரப்பர் சீட் விலை என்ன என்றால் தெரியாது. எத்தனை வருடமாக பால் வெட்டும் தொழில் செய்து வருகிறேன் என்றால் 10 வருடங்களாக செய்து வருகிறேன். ரப்பர் சீட்டுக்கு விலை கூடுதலா அல்லது ரப்பர் ஒட்டுதலுக்கு எவ்வளவு விலை என்றால் தெரியாது. நான் வெட்டும் பாலை சீட்டாக தான் அடிப்போம் என்றால் சரிதான்.

3. சீட் செய்து அடிக்க பயன்படுத்தும் இயந்திரம் கரும்பு சார் அரைக்கும் இயந்திரம் போன்ற அமைப்பு கொண்டது என்றால் சரிதான். என் வீட்டின் பக்கத்தில் மேற்சொன்னவாறு எத்தனை இயந்திரம் உள்ளது என்றால் 1 இயந்திரம் உள்ளது. மேற்சொன்ன இயந்திரம் என் அண்ணணின் வீட்டில் இருந்து 60 அடி துரத்தில் உள்ளது என்றால் சரிதான். எத்தனை வருடமாக மேற்சொன்ன இயந்திரம் உள்ளது என்றால் 2

வருடங்களாக உள்ளது. அதற்கு முன்பு ரப்பர் சீட் எங்கு அடிப்போம் என்றால் பால் வெட்டும் கண்டத்தில் ஒரு இயந்திரம் உள்ளது அதை பயன்படுத்தி வந்தோம். என் வீட்டை சுற்றி பால் வெட்டும் நபர்கள் எங்கு சீட் அடிப்பார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பால் சீட்டை உறை வைக்க என்ன ரசாயனம் பயன்படுத்தப்டும் என்றால் சல்பாரிக் அமிலம் மற்றும் பார்மிக் அமிலம் ஆகும்.

4. புளிப்பு சுவை வைத்து தான் பால் உறைய வைக்கமுடியும் என்றால் அமிலத்தை சுவாசித்தாலே உயிருக்கு ஆபத்து ஏற்படும். புளி கரைத்து விட்டாலும் பால் உறையும் என்றால் அதுபற்றி தெரியாது. பிரதிவாதியின் வீட்டின் பக்கத்தில் உள்ள ஒரு இயந்திரத்தின் உரிமையாளர் பெயர் என்ன என்றால் செல்வராஜ் ஆகும். மேற்சொன் இயந்திரம் வாதியின் வீட்டில் இருந்து 50 அடி தொலைவிற்குள் உள்ளது என்றால் சரியல்ல. (முதலில் 50 அடி தொலைவிற்குள் உள்ளது என்று சாட்சி சொல்விட்டு தற்போது 50 அடி தொலைவிற்கு மேல் என்று குறிப்பிடுகிறார்). பிரதிவாதியின் வீட்டிற்கு முன்னால் ஒரு பஞ்சாயத்து ரோடு செல்கிறது என்றால் சரிதான். மேற்சொன்ன ரோடு எத்தனை அடி நீளம் என்றால் 10 அடி ஆகும். அந்த ரோடை தொட்டு வீட்டிற்கும் ரோட்டிற்கும் நடுவே பிரதிவாதியின் கிணறு உள்ளது என்றால் சரிதான்.

5. கிணறு இருக்கும் இடத்தில் இருக்கும் ரோட்டை தாண்டி செல்வராஜின் சொத்தில் ரோட்டை தொட்டு ரப்பர் அடிக்கும் இயந்திரம் வைக்கப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதியின் கிணற்றில் இருந்து 35 அடி தொலைவில் உள்ளது. மேற்சொன்ன ரப்பர் இயந்திரத்தை நான் தான் நடத்தி வருகிறேன் என்றால் இல்லை. மேற்சொன்ன இயந்திரங்களை பழுதுபார்க்கும் வேலை நானும் என் அண்ணனும் செய்து வருகிறோம் என்றால் இல்லை. மேற்சொன்ன இயந்திரத்தில் நானும் ரப்பர் அடிக்க பயன்படுத்தி வருகிறேன் என்றால் ஒரு சீட் அடிக்க மட்டும் பயன்படுத்தி வருகிறேன். எனக்கு சீட் எங்கு அடிப்பேன் என்றால் தனிப்பட்ட ரப்பர் சீட் ஏதும் இல்லை. எனக்கு 1 ஏக்கர் அளவு சொத்து உள்ளது என்றாலும் அதில் ரப்பர் சீட்களை அடிக்க மேற்சொன்ன இயந்திரத்தில் தான் அடிப்பேன் என்றால் சரியல்ல.

6. பிரதிவாதி வைத்திருக்கும் இயந்திரத்தில் இருந்து வரும் கழிவுகளை சேகரிக்க தனியாக ஒரு பிளாஷ்டிக் பீப்பாய் (Plastic Drum) வைத்துள்ளார் என்றால் வைத்துள்ளார் ஆனால் அந்த பிளாஷ்டிக் பீப்பாயில் கழிவுகளை சேகரிக்கவில்லை திறந்த வெளியில்தான் விடப்பட்டுள்ளது. மழை நீர் சேகரிக்க ஒரு குழி அமைக்கப்பட்டு சுற்றி சிமெண்ட்டில் கட்டப்பட்ட வட்டவடிவ சுற்று சுவர் உள்ளது என்றால் சரியல்ல. கழிவு தண்ணீர் தான் சேகரிக்கப்படுகிறது. செல்வராஜ் சொத்தில் உள்ள இயந்திரத்தில்

இருந்து வெளிவரும் கழிவுகளை திறந்த வெளியில் மண்ணில் தான் விடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல குன்று அமைக்கப்பட்டு கழிவு நீர்கள் சேகரிக்கப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் வரும் போது மேற்சொன்ன கழிவுகளை நீர் தேக்க தொட்டியை பார்வையிட்டாரா என்றால் பார்வையிட்டார் நீதிமன்ற ஆணையருக்கு நான் தான் திறந்து காட்டினேன்.

7. பிரதிவாதிகள் அமைத்து உள்ள நீர் தொட்டில் முடி அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன தண்ணீர் தொட்டியில் இருந்து ஆய்வுக்காக தண்ணீர் மாதிரிகள் ஏதேனும் எடுத்தார்களா என்றால் இல்லை. என் அண்ணன் கிணற்றில் உள்ள தண்ணீர் மேற்சொன்ன கழிவு நீரால் கெட்டுவிட்டது என்றால் சரிதான். என் அண்ணன் கிணற்றில் இருந்தும் ஆய்வுக்காக தண்ணீர் மாதிரி ஏதும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் கழிவு நீர் தொட்டி அமைக்கப்படவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் வாதியின் கிணற்றில் உள்ள நீர் கெட்டு போகவில்லை என்றாலும் தொழில் போட்டியால் பிரதிவாதி மீது போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. உண்மையிலேயே நான் சொல்வது போல் கிணற்றில் உள்ள குடிநீர் கெட்டு இருந்தாலும் பிரதிவாதி அமைத்துள்ள நீர் தேக்க தொட்டியில் இருந்து மாதிரிகள் எடுத்து நீதிமன்ற ஆணையர் எடுத்து ஆய்வுக்கு அனுப்பி இருப்பார் என்றால் சரியல்ல.

8. பிரதிவாதியின் சொத்தில் அமைக்கப்பட்டுள்ள நீர் தேக்க தொட்டியில் நான்கு பக்கமும் கான்கீரிட் சிமெண்டால் அமைக்கப்பட்டதால் என்றால் சரியல்ல. சிமெண்ட் ஏதும் போடாமல் அமைக்கப்பட்டுள்ளது. நான் சொல்வது பொய் என்றாலும் சிமெண்ட் ஏதும் தரைதளத்தில் போடாமல் அமைக்கப்பட்டிருந்தால் நீர் ஏதும் தேங்கி நிற்காது என்றால் சரியல்ல. அமிலம் என்பதால் அது தேங்கி நிற்கிறது. அமிலம் கலந்த தண்ணீர் மண்ணில் தாழ்ந்து செல்லாதா என்றால் குறிப்பிட்ட அளவு தான் தாழ்ந்து செல்லும். அவ்வாறு உள்ள நிலையில் அமிலம் கலந்த தண்ணீர் பக்கவாட்டிலும் அதே அளவு தான் தாழ்ந்து செல்லும் என்றால் தாழ்ந்து செல்லும். பிரதிவாதியின் சொத்தின் தெற்கு பக்கம் தாழ்வாக, சாய்வான பகுதியா உள்ளது என்றால் சரிதான். 20 அடி சாய்வான பகுதி உள்ளது. தற்போது ரப்பர் சீட்டின் விலை ரூ.190/- என்றாலும் பதப்படுத்தப்படாத ரப்பர் விலை ரூ.100/- என்றால் அதுபற்றி தெரியாது. ரப்பர், ரப்பர் சீட்டாக மாற்றப்படாமல் பதப்படுத்தா ரப்பராக விற்றால் வரவு, செலவைவிட குறைவாக இருக்கும் என்றாலும் தொழில் தோய்வடைந்துவிடும் என்றால் அதுபற்றி தெரியாது. ஒவ்வொருவரும் அவர் அவர் வீட்டில் தனித்தனியாக இயந்திரம் அமைத்து ரப்பர் சீட் தயார் செய்ய முடியாது என்றால் சரிதான். நான் சொல்வது பொய் என்றாலும் வசதி உள்ளவர்கள் அவரவர்

இடத்தில் ரப்பர் சீட் அடிக்கும் இயந்திரம் அமைத்துக் கொள்வார்கள் என்றால் சரியல்ல. வெண்டளிக்கோடு என்ற ஊரில் 10 வீட்டிற்கு ஒரு இயந்திரம் உள்ளது என்றால் இல்லை.

9. வசதி இல்லாதவர்கள் இயந்திரம் அமைத்துள்ள நபர்களின் இயந்திரத்தை பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு எத்தனை சீட் கிடைக்கும் என்றால் தெரியாது. பிரதிவாதி தன்னுடைய தனிப்பட்ட பயன்பாட்டிற்காக இயந்திரம் அமைத்துள்ளார் என்றால் சரியல்ல. என் அண்ணன் கால்புணர்ச்சியால் தாக்கல் செய்துள்ள வழக்கு என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

வாதியின் கிணறு எத்தனை அடி ஆழம் உள்ளது என்றால் 40 அடி உள்ளது. தற்போது வாதி மேற்சொன்ன கிணற்றில் இருந்து தான் குடிதண்ணீர் எடுத்து வருகிறார் என்றால் இல்லை. என்னுடைய வீட்டில் இருந்து தான் குடிதண்ணீர் பயன்படுத்தி வருகிறார் என்றால் சரிதான்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதியின் கிணறு எத்தனை அடி ஆழம் உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. தற்போதும் பிரதிவாதி அந்த கிணற்றில் தான் குடி தண்ணீர் எடுத்து பயன்படுத்தி வருகிறார் என்றால் அதுபற்றி தெரியாது. என் வீட்டில் இருந்து தான் என் அண்ணண் குடி தண்ணீர் எடுத்து வருகிறார் என்றால் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.